Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 378/2025** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| **Name** | :: | **சித்ரகலா (காவல் ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**25.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 04.05.2025ம் தேதி சாத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த சுரேஷ்குமார் அவர்கள் குற்ற எண். 25/2025 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதற்கட்ட விசாரணை மேற்கொண்ட வழக்கு கோப்பினை பார்வையிட்டு தொடர் விசாரணைக்கு எடுத்து கொண்டு எதிரி மாரிமுத்துபாண்டியை தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் அன்றைய தினமே வழக்கு சம்பவத்தின்போது ரோந்து பணிக்கு சென்ற சிறப்பு சார்பு ஆய்வாளர் முனியாண்டி, தலைமை காவலர் கார்த்திக், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட விசாரணை மேற்கொண்ட சிறப்பு சார்பு ஆய்வாளர் சுரேஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றபட்ட சுமார் 180 மிலி அளவுள்ள 180 ML mens club – 27 பாட்டில்களை உதவி ஆணையர் (கலால்) (Excise

Departement, Virudhunagar) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு மேற்படி மதுபாட்டில்கள் ந.க.க.எண். 2/20.01.2025 ன்படி அழித்தற்கான சான்றினை பெற்றேன். **(அழித்தல் சான்று அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மாரிமுத்துபாண்டி மீது பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடமானது பொது மக்கள் அதிகம் நடமாடும் இடம் என்றால் சரிதான். உண்மையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டு இருந்தால் அவை வீடியோ பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றாலும் சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தில் தான் வீடியோ பதிவு எதுவும் சம்பவத்தின் போது மேற்கொள்ளப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பாட்டில்களில் மதுபானங்கள் தான் இருந்தது என்பதை நிரூபிக்க பகுப்பாய்விற்கு நான் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

2. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் புள்ளிவிவரத்திற்காக எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**